தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1982 மார்ச், 27

பங்குனி 14, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.''

ஒருவரை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவர் இடத்தில், பகைமையிலும் நல்ல பண்புகள் உள்ளன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

1. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, 1982ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்தம்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

128 55—1